# கழகத் தலைவர் அறிவித்த 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கைக்கு செல்லுமிடமெல்லாம் மக்களின் எழுச்சிமிக்க வரவேற்பு உற்சாகம் தருகிறது!

## திருப்போரூரில் நடைபெற்ற திருமணவிழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**திருப்போரூர், ஜூலை 8–**

**சென்னை – திருப்போரூர் பேரூர் கழகச் செயலாளர் – பேரூராட்சி மன்றத் தலைவர் தேவராஜ்–செல்வி தம்பதியின் மகன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் செங்குட்டுவன் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதிவாணன் – கீதா தம்பதியின் மகள் பிரித்தீகா ஆகியோரின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் திருப்போரூரில் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சிறப்புரை ஆற்றினார்.**



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.7.2025) திருப்போரூரில், பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி மன்றத் தலைவர் மு. தேவராஜ் செல்வி தம்பதியின் மகன் தே.செங்குட்டுவன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.மதிவாணன் கீதா தம்பதியின் மகள் ம.பிரித்திகா இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமிமதுசூதனன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், மாவட்ட பொருளாளர் செ.விசுவநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், துணை மேயர் கோ.காமராஜ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, தி.மு.க.மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சத்தியபிரபு உள்பட தி.மு.கழக நிர்வாகிகள், மணமக்கள் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

திருப்போரூர் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சித் தலைவர் அண்ணன் தேவராஜ் - செல்வி தேவராஜ் ஆகியோரின் அன்புமகன் செங்குட்டுவன் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மதிவாணன்-கீதா தம்பதியினரின் அன்புமகள் பிரித்திகா இணையரின் திருமணத்தை உங்கள் முன்பு நடத்தி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் சார்பாக மணமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்பான வாய்ப்பை எனக்கு அளித்து, மிகச்சிறப்பான வரவேற்பை அளித்த அமைச்சரும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கழகப் பணி- மக்கள் பணி!**

அண்ணன் தேவராஜ் அவர்கள் வார்டு செயற்க்குழு உறுப்பினர், ஒன்றியப் பிரதிநிதி, பேரூர் துணைச் செயலாளர், ஒன்றியத் துணைச் செயலாளர், மாவட்டக் கழகப் பிரதிநிதி என்று பல்வேறு நிலைகளில் கழகத்திற்காகப் பணியாற்றி, உழைத்து இப்போது தொடர்ந்து இரண்டாவது முறையாக பேரூர் கழகச் செயலாளராக கழகப் பணியையும், மக்கள் பணியையும் ஆற்றி வருகிறார்.

2006 ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரை அண்ணணின் துணைவியார் செல்வி அவர்கள் திருப்போரூர் பேரூராட்சி மன்றத் தலைவராகவும் மக்கள் பணியாற்றி இருக்கிறார். இப்போது அண்ணன் அவர்கள் பேரூராட்சித் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு, கழகத்திற்காக 5 முறை சிறை சென்றவர்தான் அண்ணன் அவர்கள். இன்னும் சொல்லப்போனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டபோது, அதை எதிர்த்துப் போராடியதற்காக, கலைஞர் இருந்த அதே மத்திய சிறையில் அடைக்கப்பட்டவர்தான் அண்ணன் தேவராஜ் அவர்கள்.

**பாராட்டு - வாழ்த்து**

அண்ணன் வழியில் அவரின் மகன் தம்பி செங்குட்டுவன் அவர்களும் இன்றைக்கு கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு கழகப்பணியை ஆற்றி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் மணமகனுக்கு `செங்குட்டுவன்' என்று பெயர் சூட்டியவர். அந்தப் பெருமைக்குரியவர் நம் மணமகன் அவர்கள். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட, பொறியாளர் அணி அமைப்பாளராக சிறப்பாகச் செயல்பட்டு வருகிற தம்பி செங்குட்டுவனுக்கு இந்த நேரத்தில் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் காலத்தில் திருமணங்களைப் பார்த்தீர்கள் என்றால், பலரும் சொல்வது சரியான பெண் கிடைக்கவில்லை, சரியான மாப்பிள்ளை கிடைக்கவில்லை என்று நிறைய திருமண தகவல் மையங்கள் வந்துவிட்டன. அதை நோக்கித்தான் இன்றைக்கு மணமக்களின் பெற்றோர்கள் சென்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

நம் கழகத்தினர் இந்த சிரமத்தைத் தவிர்க்க, அண்ணன் தேவராஜ் அவர்களின் வழியில் நாம் அத்தனை பேரும் பின்பற்றலாம். அண்ணன் தேவராஜ் அவர்களை பொறுத்தவரைக்கும் தன் பிள்ளைகளுக்கு கழகத் திருமணங்களிலேயே திருமணம் செய்து வைத்துவிடுகிறார்.

**கூடுதல் பெருமை**

அண்ணன் தேவராஜ் தன் மகளை கழக பொதுக்குழு உறுப்பினர் அண்ணன் செங்குன்றம் பரந்தாமன் அவர்களின் மகனுக்கு மணம் முடித்து கொடுத்து இருக்கிறார். அந்த திருமணத்தையும் நான்தான் நடத்தி வைத்தேன். இன்றைக்கு இந்த திருமணத்தையும் நான்தான் நடத்தி வைக்கிறேன். அதில் எனக்கு கூடுதல் பெருமை.

இன்றைக்கு மகனுக்கு கழகக் குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் மதிவாணன் அவர்களின் வீட்டில் பெண் எடுத்து இருக்கிறார். இந்தத் திருமணத்தை நான் நடத்தி வைக்கின்ற பெருமையைப் பெற்று இருக்கிறேன். இப்படிக் கழக குடுபங்களுக்குள் சம்பந்தம் செய்யும்போது உங்களின் குடும்பங்களும் வலுப்பெறும். அதோடு சேர்ந்து நம் இயக்கமும், கழகமும் வலுப்பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இங்கு மணமகளின் தந்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மதிவாணன் பற்றியும் சொல்லியாக வேண்டும். ஏனென்றால், அவர் எங்களின் இளைஞர் அணியில் இருந்து வந்தவர். அண்ணன் அன்பரசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். அண்ணன் அவர்கள் மாவட்ட அமைப்பாளராக இருக்கும்போது அண்ணன் மதிவாணன் அவர்கள் இளைஞர் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளராக சிறப்பாகச் செயல்பட்டவர் தான் அண்ணன் மதிவாணன் அவர்கள்.

1996-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் அண்ணன் மதிவாணன் அவர்கள். இப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த நம் கழகத்தின் குடும்ப விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு பேசும்போது சொன்னார்கள். இந்தத் திருமண விழாவிற்கு அனைவரும் மகிழ்ச்சியாக வந்து இருக்கிறீர்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், நிறைய மகளிர் சிரித்த முகத்துடன், மணமக்களை வாழ்த்துவதற்காக வந்து இருக்கிறீர்கள்.

**மக்களின் எழுச்சி**

நம் தலைவர் அவர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு அறிவித்தார். இன்னும் 9 மாதங்களில் 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. நிச்சயமாக மக்களின் எழுச்சியைப் பார்க்கும்போது மீண்டும் நம் தலைவர் அவர்கள்தான் முதலமைச்சராக தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படப் போகிறார் என்பது உறுதியாகத் தெரிகிறது.

ஏனென்றால், `ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்று தலைவர் அவர்கள் உறுப்பினர்களைச் சேர்க்கச் சொல்லி இருக்கிறார்கள். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தது 30 சதவிகித வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்கச் சொல்லி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தலைவர் அவர்களே ஒவ்வொரு வீடாகச் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டு, அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து இருக்கிறார். நான் என்னுடைய தொகுதி சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் சேர்த்துக்கொண்டு இருக்கிறேன்.

வாகனத்தில் வரும்போது அண்ணன் அன்பரசன் என்னிடம் சொன்னார். எப்படி இருக்கிறது வரவேற்பு. எப்படி இருக்கிறது மக்களிடம் எழுச்சி. சிரித்த முகத்துடன் வரவேற்கிறார்கள் என்றுச் சொன்னார். அண்ணன் இ.க (இ.கருணாநிதி) அவர்கள் பேசும்போதும் சொன்னார் தலைவரே தினமும் அலைபேசியில் வந்து கேட்கிறார். பொதுமக்களின் ஒத்துழைப்பு எப்படி இருக்கிறது, என்று கேட்கிறார். மிகச் சிறப்பாக, எழுச்சியாக இருக்கிறது. தலைவர் அவர்கள் இந்த நான்கு வருடங்களில் எத்தனையோ திட்டங்களை சிறப்பாக செய்து இருக்கிறார்.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது எல்லாம் அடுத்து வருகின்ற 8 மாதங்களில் அரசின் சாதனைகளை, மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு அனைவரும் வாழ்த்தும்போது, `மணமக்கள், தந்தை பெரியாரும் - சுயமரியாதையும் போல, பேரறிஞர் அண்ணாவும் - தமிழும் போல, முத்தமிழறிஞர் கலைஞரும் - இயக்கமும் போல, தலைவரும் - நம் திராவிட மாடல் அரசும் போல மணமக்கள் வாழ வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

நான் மணமக்களிடம் சொல்லிக் கொள்வது எல்லாம் ஒன்றே, ஒன்றுதான். நல்ல நண்பர்களாக ஒருவருக்ொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

நம் தலைவர் அவர்கள் எந்தத் திருமணத்திற்கு சென்றாலும், ஒரேயொரு கோரிக்கை வைப்பார். மணமக்கள் தங்களுக்கு பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ்ப் பெயரை சூட்ட வேண்டும் என்றுக் கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் அன்பரசன் அவர்களுக்கும், மணமக்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இதயவர்மன், மாமல்லபுரம் விஸ்வநாதன், அன்புச்செழியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை மனோகரன், துணை மேயர் காமராஜ், தமிழ்மாறன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்யபிரபு, தையூர் விஜயகுமார், கமலக்கண்ணன், மணிகண்டன், ஜானகிராமன், ராஜேஷ், இன்சமாம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

---

### கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை - தொழிலாளர்கள்

## 'ஓரணியில் தமிழ்நாடு' வெற்றிக்குப் பாடுபடுவோம்!

### நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. மாநில கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூலை 8 -

தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொ.மு.ச. மாநில நிர்வாகிகள் கூட்டம் 29.6.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் திருச்சி பாலக்கரை அருகே உள்ள சந்தன மஹால் அரங்கத்தில் தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம், எம்.பி., தொ.மு.ச. பேரவைத் தலைவர்கி. நடராசன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன், பேரவைத் துணைத்தலைவர் இரா.பொன்னுராம் ஆகியோரின் வாழ்த்துக் களுடன் மாநில தலைவர் து.பிச்சை தலைமையில், பொருளாளர் இரா.பழனியப்பன் துணைத்தலைவர் மரு.இரா. ராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். திருச்சி அமராவதி தொ.மு.ச. பொதுச் செயலாளர் பி.சதீஷ்குமார், திருச்சி சிந்தாமணி தொ.மு.ச. பொதுச்செயலாளர் ராஜன் சுவாமிநாதன், காஞ்சிபுரம் தொ.மு.ச. எம்.ஜானகிராமன் பொதுச்செயலாளர், திருவாரூர் தொ.மு.ச. டி.காளிதாஸ், பொதுச் செயலாளர், சந்திரகேசரபுரம் தொ.மு.ச. கோபிநாத் தலைவர், சேலம் பொன்னி தொ.மு.ச மணிகண்டன், தஞ்சாவூர் ஏ. விஸ்வநாதன், மதுரை எம்.பாலகார்த்திக், பூங்கா நகர் பி.மாலதி, கரூர் ஆர்.குமார், திருப்பூர் சி.செல்வேந்திரன், சிவகங்கை கே.நாகராஜ், புதுக்கோட்டை எம். கிருஷ்ண குமார், திண்டுக்கல் ராணி, திருவள்ளூர் இ.எம்.பாபு, திருவண்ணாமலை பி.பாண்டியன், தர்மபுரி சிங்கார வேல் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களை தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. பொதுச் செயலாளர் சு.பத்மநாபன் விளக்கி பேசினார்.

அகில உலகமே வியக்கும் வண்ணம் பல்வேறு சாதனைகளை செய்து திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இக் கூட்டத்தில் வாழ்த்துவதுடன் ஓரணியில் தமிழ்நாடு என்ற கோட்பாட்டுடன் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றிபெற பொது மக்களுடன் நேரடி தொடர்பில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை தொழிலாளர்களுடன் ஒன்றுபட்டு வெற்றிக்கு பாடுபடுவோம் என உறுதி மேற்கொள்வோம்.

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை பணியாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31.3.2025வுடன் முடிவடைந்த நிலையில் 1.4.2025 முதல் புதிய ஊதிய உயர்வு வழங்ககோரி தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி., தலைவர் கி.நடராஜன் ஆகியோர் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களை சந்தித்து 9.03.2025 அன்று கொடுக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று 06.06.2025 அன்று கூடுதல் பதிவாளர் 1 (நுகர்வோர் பணிகள்) எஸ்.பி. அம்பரித் தலைமையில் குழு அமைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கூட்டுறவு துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் அவர்களுக்கும், முதன்மைச் செயலாளர் தி. சத்திய பிரதசாகு, பேரவை பொதுச் செயலாளர், தலைவர், பொருளாளர் ஆகியோர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

கூட்டுறவு பண்டகசாலை பணியாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகளை ஊதிய உயர்வு குழு தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப 1.4.2025 முதல் புதிய ஊதிய உயர்வினை குழு எங்கள் கோரிக்கையை ஏற்று பரிந்துரைக்க குழுவினை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் உள்ளிட்ட கூட்டுறவு நிறுவனங்கள், நுகர்பொருள் வாணிப கழகம் ஆகியவை நடத்தும் நி.வி.கடைகளை ஒரே துறையின் கீழ் முதலமைச்சர் அவர்கள் 2021 தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி மாற்றம் செய்திட இந்த நிர்வாக குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொது விநியோக திட்டத்தில் ஒன்றிய அரசின் உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட எடைத்தராசு POS மிசின் புளுடூத் இணைப்பினை முழுமையாக ரத்து செய்து பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் குடிமைப்பொருள் விநியோகம் நடைபெற மாநில அரசை கேட்டுக் கொள்கிறோம்.

**ஊழியர்களின் கோரிக்கைகள்**

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஊழியர்களின் கோரிக்கைகளை தொ.மு.ச. நிர்வாகிகள் கொடுக்கும்போது அவற்றை அதிகாரிகள் அலட்சியப்படுத்துவதும் மாற்று கருத்துகளை தெரிவிப்பதும் பண்டகசாலையின் வளர்ச்சிக்கு தேவையில்லாமல் அரசுக்கு எதிராக செயல்படும் அதிகாரிகளை உடனடியாக பணியிடமாற்றம் செய்திட கேட்டுக் கொள்கிறோம். கூட்டுறவு துறை அமைச்சர் அவர்களை உடன் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டசாலைகளில் 2008 ஆண்டு கூட்டுறவு சங்க பதிவாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட பணிநிலை திறன் தற்போது வரை நடைமுறையில் உள்ளது. அதனை உள்ளது. அதனை மாற்றி தற்போதைய பண்டகசாலைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப பணிநிலை திறனை நிர்ணயம் செய்து புதிய ஊதிய உயர்வு ஆணை வழங்கிட பதிவாளர் அவர்களை இந்த நிர்வாக குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் பணிபுரியம் அனைத்து நிரந்தர பணியாளர்களும் ஒரே நிர்வாகத்தில் பணியாற்றி வருவதால் அவர்கள் அனைவருக்கும் பதிவாளர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரே மாதிரியான ஊதியம் வழங்கி பண்டகசாலை பணியாளர்களாக கருதப்பட்டு 12/3 ஒப்பந்தம் ஏற்படுத்த வலியுறுத்தி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கூட்டுறவு நுகர்வோர் மொத்த விற்பனை பண்டக சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள பணிப்பதவி உயர்வினை உடனடியாக வழங்கிட ஆவண செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு வழங்கும்போது காலியாக உள்ள பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அமைப்பின் மூலம் புதிய பணியாளர்களை தேர்வு செய்து உடனடியாக நிரப்பிட கேட்டுக் கொள்கிறோம்.

பண்டகசாலை பணியாளர்களின் சேமிப்பு நாள் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் 300 நாட்கள் ஈட்டிய விடுப்பு தொகை வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சு. பத்மநாபன் அறிவித்தார்.




சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (07.07.2025) நடைபெற்ற சேலம் இரும்பாலை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் 30வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு விழாவில் மருத்துவ மாணவர்களுக்கு பட்டடப்படிப்பு சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஏ.தேரணிராஜன், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ.தேவி மீனாள், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி ஆகியோர் உள்ளனர்.





சைதை கிழக்கு பகுதியில் அடங்கிய 169 வது வட்டம், வெங்கடாபுரம், குடிசை பகுதி மற்றும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பகுதியில் 6.7.2025 அன்று 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்த்தலை துணை மேயர் மு.மகேஷ்குமார் தொடங்கி வைத்து, வீடு, வீடாக சென்று, கழக அரசின் சாதனைகளை விளக்கி வீடுகள் தோறும் ஸ்டிக்கர் ஒட்டினார். இந்நிகழ்ச்சியில் எஸ்.குணசேகரன், மு.ஆரோக்கியம், இரா.சுதாபிரியன் அ.ஆரி. இரா.தமிழவாணன் , துரைசரவணன், மு.சந்திரா, மை.அருள் ராஜ், வி.என்.செல்வமணி, சூரியன் கே.பிரபு, அ.ஆனந்தராஜ, ஆ.பரணி, ஜோ.சசிகுமார், டி.அர்ஜுன் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் பாகப் பணியாளக்ரள் பங்கேற்றனர்.